கற்கண்டு வேற்றுமை

**1.எழுவாய் வேற்றுமையை விளக்குக.**

வேற்றுமை உருபுகள் இல்லாமல் ,எழுவாய் தனியாக நின்று, இயல்பான பொருளைத் தருவது எழுவாய் வேற்றுமை ஆகும்.

சான்று பாவை வந்தாள்

**2. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?**

கொடை, பகை ,,நட்பு ,தகுதி ,அதுவாதல், பொருட்டு ,முறை ,எல்லை

**3. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?**

ஒடு,ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமைஉருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

சான்று தாயோடு குழந்தை சென்றது.

**இயல் -5**

கவிதைப்பேழை – திருக்கேதாரம்

1. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
புல்லாங்குழல் மற்றும் முழவு ஆகியவற்றைத் தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும்.

2. தேவாரம் பாடிய மூவர் யார் ?
திருஞானசம்பந்தர் ,திருநாவுக்கரசர் ,சுந்தரர்

3. தேவாரம் பெயர் காரணம் கூறுக.
1.தேவாரம் இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை தேவாரம்.
2.இனிய இசை பொருந்திய பாடல்.

4.திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?(சி.வி

இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது, அதற்கு ஏற்றவாறு புல்லாங் குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.

பொன் வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த் திவலைகளை வாரி இறைக்கும்.

மத யானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் எழும் கின் என்னும் ஒலியானது இசையாக முழங்கும்.

உரைநடை உலகம் – நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

1. எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் எனக் கூறுகிறோம்?
மண்பாண்டப் பொருட்கள் செய்தல்.பனைஓலை, பிரம்பு,மூங்கில் ஆகியவற்றில் பொருள்கள் செய்தல்.பாய் பின்னுதல் ஆகியவற்றைக் கைவினைக் கலைகள் என்கின்றோம்.

2. மண்பாண்டம் ,சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக
களிமண்ணை ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து மெல்லிய மணல் மற்றும் சாம்பல் சேர்த்து சக்கரத்தால் செய்வது மண்பாண்டம். களி மண்ணால் செய்யப்பட்டு சூளையில் சுட்டு எரித்து எடுக்கப்படுபவை சுடு மண் சிற்பங்கள்.

3.பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை ?
கிளுகிளுப்பை ,பொம்மைகள் , சிறிய கொட்டான் ,பெரிய கூடை,சுளகு , விசிறி ,தொப்பி , ஓலைப்பாய் ,பனை மட்டை, கயிறு, கட்டில் ,கூடை.

4.பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையை கூறுக.(சி.வி)
முதலில் பிரம்புகளை நெருப்பில் காட்டி சூடு படுத்த வேண்டும்.சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரண்டு பாறைகளுக்கு இடையே வைத்து வளைக்க வேண்டும் .அது கம்பி போல வளையும்.தண்ணீரில் நனைத்து வைத்து விட்டால் ,அப்படியே நிலைத்து விடும்.பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும்,சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கூட்டியும் தேவையான பொருட்களாக மாற்றலாம்.

2.மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.(சி.வி)
மட்டக் கூடை, தட்டுக் கூடை ,கூடை முறம் ,ஏணி,சதுரத் தட்டி,கூரைத் தட்டி, தெருகூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப் பெட்டி, பழக்கூ டை, பூக்கூடை,பூத்தட்டு,கட்டில், புல்லாங்குழல் ,புட்டுக்குழாய் ,கால்நடை களுக்கு மருந்து புகட்டும் குழாய், தொட்டில், பாடை

விரிவானம் – தமிழர் இசைக்கருவிகள்

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக

முன்னுரை

மக்களின் மனதிற்கு எழுச்சியைத் தருபவை இசைக்கருவிகள். இசை கருவிகள் குறித்து காண்போம்.

காற்றுக் கருவிகள்

காற்றைப் பயன்படுத்திச் செய்யப்படுபவை காற்றுக்கருவிகளாகும். குழல், சங்கு ,கொம்பு ஆகியவை காற்றுக் கருவிகளாகும்.

குழல்

குழல் என்றால் புல்லாங்குழல் ஆகும் . மூங்கில் ,சந்தனம் செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் செய்யப்படுகின்றன. திருவள்ளுவரும் 'குழல் இனிது' என்கின்றார்.

கொம்பு

கொம்பு இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர் அதுவே ,பின்னால் 'கொம்பு' என்னும் இசைக்கருவி தோன்றக் காரண மாயிற்று. இக்கொம்பினை ஊதுவார்கள் .திருவிழா காலங்களில் கொம் பினை ஊதுவர்.

சங்கு

சங்கு ஓர் இயற்கைக் கருவி .கடலிலிருந்து எடுக்கப்படும் வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை," வலம்புரிச் சங்கு என்று கூறுவர்.

முடிவுரை

அழிந்து வரும் இவ்வகைக் காற்று இசைக்கருவிகளைக் காப்பாற்ற வேண்டும்.

கற்கண்டு –தொகைநிலை ,தொகாநிலை தொடர்கள்

1.தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்.வேற்றுமைத்தொகை, வினைத்தொகை,பண்புத்தொகை,உவமைத்தொகை,உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

2.இரவுபகல் என்பது எவ்வகை தொடர் என விளக்குக.
'இரவும்பகலும்' எனசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம் ' என்னும் இடைச் சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத் தொகை என்பர்.

3.அன்மொழித்தொகை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
வேற்றுமை, வினை, பண்பு, உவமை ,உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது தொகை எனப்படும். சான்று – பொற்றொடி வந்தாள்.

திருக்குறள்

1) நன்மைதரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழியாது?
இந்தச் செயலை இந்த வகையால் இவர் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து, அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

2)சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
எதையும் நன்கு ஆராய்ந்து, ஒருபக்கம் சாயாது நடுவு நிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சி ஆகும்.

3)அரசன் தண்டிக்கும் முறை யாது?
ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து, மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பதுஅரசனின் கடமையாகும்.

4)சிறந்த சொல்லாற்றல் இயல்பு என்ன?
கேட்பவரைத்தன் வயப்படுத்துவது கேளாதவரைக் கேட்கத் தூண்டுவது சிறந்த சொல்லாடலின் இயல்பு ஆகும்.

**இயல் -6**

உரைநடை உலகம் – கொங்குநாட்டு வணிகம்

1)மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இவர்கள் பல நெடுங்காலத்திற்கு முன்னரே முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.

2)கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
காவிரி ,பவானி, நொய்யல், அமராவதி.

3)'தமிழ்நாட்டின் ஹாலந்து'என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
திண்டுக்கல். மலர் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதால், தமிழ்நாட்டின் ஹாலந்து என்று திண்டுக்கல் நகரம் போற்றப்படுகிறது.

